**தேசிய இளைஞர் படையணி - 2024**

-------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் (“படையணி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று போதியளவிலான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தி மற்றும் 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகத் தரப்பினரின் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு படையணியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- படையணியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- படையணியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள மற்றும் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்காக செலுத்தப்பட்ட தொழிலாரம்பிப்பு முற்பணம் ரூபா 99,863,619 மற்றும் ரூபா 5,042,601 தொகையான ஏனைய பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்யக்கூடிய இயலுமை குறித்து ஆராய்ந்து அழிவு நட்டத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக அறவிடப்படாதுள்ள நிர்மாண முற்பணங்களை அறவிடுவதற்கு, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் ஒரு நடுவரை நியமித்தல், ஒப்பந்ததாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குதல், சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டுகளை தீர்க்குமாறு எழுத்துப்பூர்வமாக பொறுப்பான தரப்பினருக்குத் | நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தெரிவித்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிராகரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய பணிக்கொடை பெறமதி மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் அத்திகதியில் உள்ளபடியாக அந்த பெறுமதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 8,402,834 | 4,938,969 | 3,463,865 | இதனை திருத்துவதற்கு பேரேட்டுப் பதிவு இடப்பட்டுள்ளது. அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் அந்த திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | பணிக்கொடை கணிப்பீடு மற்றும் கணக்கு வைத்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின இறுதியில் உள்ளபடியாக ஏனைய செலுத்த வேண்டியவற்றின் பெறுமதி ரூபா 31,692,722 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 02 முதல் 04 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள மீதிகள் முறையே ரூபா 6,277,103 மற்றும் ரூபா 1,316,805 ஆகும். | கட்டுமானங்களுக்காக நிறுத்தி வைக்கப்ப்ட்ட தொகையை பெற வேண்டிய முற்பணத் தொகையிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செலுத்த வேண்டிய தொகையினைத் தாமதமின்றித் தீர்த்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1990 இன் 41 ஆம் இலக்க மற்றும் 1992 இன் 62 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | ஊழியரொருவர் சேவையிலிருந்து விலகி 30 நாட்களினுள் பணிக்கொடை கொடுப்பனவுகள் செலுத்தி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் அனுமதிகள் வழங்குவதில் நிலவிய பல்வேறு தாமதங்கள் மற்றும் உரித்தினை பெற்றுக்கொள்ள முன்வைக்கப்படாத காரணத்தால் 2025 யூலை 15 ஆந் திகதியளவில் 24 ஊழியர்களுக்கு ரூபா 2,608,289 தொகையான பணிக்கொடை கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டது. | இது தொடர்பான அனுமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அல்லது உரித்து பலன்களை கோரவோ இதுவரை முன்வராத காரணத்தால் பணிக்கொடை வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளது. | சட்டத்தின் விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயல்வழிக் கையேட்டின் 3.4 ஆம் பந்தி | தமது மனிதவளத் தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு திட்டமிடப்பட்டிராததுடன், அவ்வாறான திட்டமொன்று இல்லாதிருந்த காரணத்தால் நிறுவனத்திற்குரிய புதிய பதவிகள் மற்றும் அந்த பதவிகளுக்கு தேவையான திறன்கள் இனங்காணப்பட்டு பதிலீட்டு திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது மனிதவள தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டுக்கான புதிய திட்டங்களை தயாரிப்பதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 27,054,052 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 61,951,705 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 89,005,757 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பொது திறைசேரியிலிருந்து கிடைத்த மீண்டெழும் மானியங்கள் ரூபா 255,658,310 இனால் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள், கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு, அதிகரிப்பு மற்றும் குறைவுகளின் சதவீதம் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| விபரம் | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டு<br>ரூபா மில். | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு<br>ரூபா மில். | வேறுபாடு (சாதகமான/ (பாதகமான))<br>ரூபா மில். | சதவீதம் % |
|---|---|---|---|---|
| <u>வருமானம்</u> | | | | |
| திறைசேரி மானியங்கள் | 1,085.98 | 830.32 | 255.66 | 30.79 |
| படையணியால் உழைக்கப்பட்ட வருமானம் | 256.74 | 205.47 | 51.27 | 24.95 |
| <u>செலவினங்கள்</u> | | | | |
| ஆளணி வேதனம் | 510.76 | 432.93 | (77.83) | 17.98 |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 565.65 | 464.47 | (101.18) | 21.78 |
| இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினம் | 78.04 | 49.43 | (28.61) | 57.88 |
| இளைஞர் ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு செலவினம் | 161.21 | 150.92 | (10.29) | 6.82 |

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மொத்த வருமானம் 29.63% இனால் அதிகரித்திருந்த போதிலும், அதனோடொத்த செயற்பாட்டு மற்றும் ஏனைய செலவினம் 19.85% இனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் படையணிக்கு சட்டரீதியாக ஒப்படைக்கப்படாத 34 காணிகள் நிலவியதுடன், அந்த காணிகளை சட்டரீதியான சுவீகரிக்காது ரூபா 2,990.35 மில்லியன் செலவிடப்பட்டு, அந்த காணிகளில் படையணியின் பயிற்சி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | தேசிய இளைஞர் படையணியின் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள 63 காணிகளிடையே 29 காணிகள் மாத்திரம் இதுவரை சுவீகரிக்கப்பட்டுள்ளன. | காணிகளை சுவீகரிக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பணிகளை நிர்வகிப்பதற்கு தேவைப்படும் தொழில்சார் பயிற்சி, இளைஞர் அபிவிருத்தி மற்றும் நிறுவுதல் ஆகிய பணிகளுக்கு 03 குழுக்கள் நியமிக்கப்பட்டு சபையினால் தமது அதிகாரங்களை அந்த குழுக்களுக்கு வழங்க முடியுமான போதிலும், 2025 யூலை 15 கணக்காய்வு திகதி வரையிலும் மேற்படி துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின் பிரிவு 2(4) இன் கீழ் குழுக்களை நியமிக்கும் பணிகள் சபையின் அறிவுறுத்தல்களின்படி மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்வரும் சபை அமர்வுக்கு வெளி நிறுவனங்களிலிருந்து குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் குறித்து அறிக்கை வழங்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | தேசிய இளைஞர் படையணிச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நாட்டின் இணைய சமூகத்தை ஊக்குவிக்கும் பணியை மிகவும் செயற்திறனாக மேற்கொள்வதற்காக அதற்கு பொருந்தும் வகையில் காணப்படும் இயைஞர் படையணி அதிகாரச்சட்டத்தை இரத்துச்செய்து, புதிய அதிகாரச்சட்டமொன்றை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்குமாற அமைச்சரவையால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 14 வருடங்கள் கடந்த பின்னரும் உரிய முறையில் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு படையணி தவறியிருந்தது. | தற்போது இயங்கும் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் ஒரே நிறுவனத்தின் கீழ் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதால், இளைஞர் படையணி அதிகாரசபை சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வது தொடர்பான விஞ்ஞாபனம் குறித்து பரிசீலிக்கப்பட வேண்டுமெனும் அமைச்சரவை தீர்மானம் அறிவிக்கப்படவில்லை. | தேசிய இளைஞர் படையணி சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிவாரி நிறுவனங்களை ஈடுபடுத்தி தொழில்சார் பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு உரிய நிறுவனங்களை தெரிவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட்டிராததுடன், மேற்படி தொழிற்பயிற்சி பாடநெறிகளை நடாத்தும் தனியார் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செல்லுபடியான அனுமதி காணப்படுகின்றதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் படையணியின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 269 பதவியணி வெற்றிடங்கள் நிலவியதுடன், படையணியின் பிரதான பணியொன்றான இளைஞர் அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் தொழில்சார் கல்வியை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ள நேரடியாத தேவைப்படும் சிரேஷ்ட மட்டத்திலான 05 மாகாண உதவிப் பணிப்பாளர் பதவிகள், 75 நிலைய அதிபர் மற்றும் உதவி நிலைய அதிபர் பதவிகள் மற்றும் 176 மதியுரையாளர் பதவிகளும் 2025 யூலை 15 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாக நிலவின. | உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) பதவிக்காக ஆட்சேர்ப்புகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 06 மாகாண உதவிப் பணிப்பாளர் பதவிகள், 17 நிலைய அதிபர் பதவிகள், 17 தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் பதவிகள் மற்றும் 15 ஆங்கில மொழி மதியுரையாளர் பதவிகள் ஆகியவற்றுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டவாறு உள்ளன. | அத்தியாவசியமான பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |